முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1437

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.09.2023**, செவ்வாய்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளை பலமாகக்கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சுகின்ற தர்மனே
வையகத்தை காக்க வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
ஆறுமுகன் யான் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ம் நாள், 05.09.2023 செவ்வாய்கிழமை)
வரமாகத் தொடர்ந்து வழங்கிடுவேன்
வையகத்தில் உன் சக்தி உலகறியப்பட்டு
3. உலகறியப்பட்டு இனிதே உன் வழி
உலகோரெல்லாம் தொண்டர்பெருமக்களாகி
உலகத்தை ஞானலோகமாக மாற்றும்
உயர் சித்து தனை ஆறுமுகன் யான் அருளுவேன்
4. அருளவே அரங்கன் வழி தனிவழி
அறத்தின் வழி உயர்ஞானவழி
பெருமைபட அரங்கன் தொடர்பு கூட்டி
பேருலகில் தர்மத்தை வளர்த்து வந்தால்
5. வருமுலகில் சடுதி உலக மாற்றம்
வரமாக அரங்கன் தர்மத்தாலே நடந்தேறும்
ஆகவே அரங்கன் திருவடி பற்றி
ஆறுமுகா அரங்கா என போற்றி
6. ஜெகத்தோர் தொடர்ந்து சன்மார்க்க நெறிவழி
தெரிவிப்பேன் தர்மம் செய்துகொண்டு
செய்துகொண்டு ஆற்றல்பட இயங்கினால்
சித்திகளும் இனிப்பிறவாத பேரும்

7. அறத்தின் வழி இந்த உலகையே மாற்றும்
அற்புதமும் ஆக்கமும் சடுதி கண்டு
இந்த பேருலகம் ஞானலோகமாகும்
இந்தவித நடைமுறையில் உள்ள

8. மனிதர்கள் ஆட்சிகளும் முடிவுகண்டு
ஞானவான்கள் ஆட்சி ஞானிகள் ஆட்சி
ஞானபண்டிதன் யானே தலைமை ஏற்கும்
உயர் ஆட்சியாக மாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–